1972 மார்ச் 14]

(இ) தேவையான நிலங்களைக் கையகப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது இந்த மருத்துவமனை இருக்கிற இடம் நகரத்தின் நடுப் பகுதியிலும், இடவசதியில்லாமலும், சுகாதார வசதி யற்ற சூழ்நிலையிலும் இருக்கிற காரணத்தினல் கையகப்படுத்துகிற நிலத்தை விரைவாகவும் கட்டடம் எழுப்பும் பணியை இன்னும் சற்று துரிதமாகவும் செய்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படிப்பட்ட நிலை அங்கு இருப்பதினல் தான் நாலே முக்கால் ஏக்கர் அளவிற்கு நிலம் வைகைநல்லூர் என்ற குளித்தலையை யொட்டியிருக்கும் கிராமத்தில் எடுத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 58,596 நிலத்திற்கு விலை வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகள் முடிந்த பிறகு மருத்துவமனை அங்கு கட்டுவதுபற்றிய பிற நடவடிக்கைகள் தொடரும்.

* 478 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பஞ்சப்பட்டியில் உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விரிவு செய்ய ஆரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூடிய சீக்கிரம் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது? எவ்வளவு படுக்கை வசதிகள் இருக்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பஞ்சப்பட்டியில் பத்து படுக்கைகள் அமைக்க ஒரு லட்சம் ரூபாய் கட்டடத்திற்காகவும் பிற ஏற்பாடுகளுக்காகவும் வழங்கப்பட்டிருக்கிறது.